# <u>செய்திக்குறிப்பு</u>

## <u>வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை</u>

## <u>மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், காஞ்சிபுரம்</u>.

ஜூலை 15 உலக இளைஞர் திறன் நாளை முன்னிட்டு, தமிழக அரசு, ஜூலை 10 முதல் – ஜூலை 15 வரை ஒரு வார காலத்தை திறன் வாரமாக அறிவித்து வேலைநாடுநர்கள், பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு திறன் மேம்பாடு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்திட அறிவுறுத்தியுள்ளது.

இதன் ஒரு பகுதியாக, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை மற்றும் மாவட்ட நிர்வாகம் இணைந்து 10.07.2017 திங்கள் கிழமை காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள 13 வட்டாட்சியர் அலுவலகங்களிலும், 13 ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களிலும் பல்வேறு இலவச திறன் பயிற்சிக்கான பதிவுகளை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவற்றில் ஸ்ரீபெரும்புதுார், தாம்பரம், பல்லாவரம், திருக்கழுகுன்றம் ஆகிய வட்டாட்சியர் அலுவலகங்ளில் இப்பதிவு 11.07.2017 செவ்வாய் கிழமை அன்று நடைபெற உள்ளது. வட்டாட்சியர் , ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள் தவிர்த்து காஞ்சிபும் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மற்றும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திலும் 10.07.2017 அன்று இந்த இலவச திறன் பயிற்சிக்கான பதிவுகள் மேற்கொள்ளப்பட உள்ளது.

இந்த இலவச திறன் பயிற்சி காலத்தில் பயிற்சி பெறுவோருக்கு போக்குவரத்து கட்டணமாக ஒரு நாளைக்கு ரூ.100/–ம், பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பும் ஏற்படுத்தி தரப்படும்.

மேற்கண்ட இலவச திறன் பயிற்சி பெற விரும்புவோர் தங்களது கல்வி சான்றுகள் மற்றும் முகவரிக்கான சான்றுடன் 10.07.2017அன்று மாவட்ட ஆட்சியர் அலுவலகம், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், வட்டாட்சியர் அலுவலகம், ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள் இவற்றில் எதேனும் ஒரு இடத்தை அணுகி பயன் பெற காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் திரு.பா.பொன்னையா.இ.ஆ.ப., அவர்கள் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் தெரிவித்துள்ளார்.

7/7/17

துணை இயக்குநர்,
மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம்,
காஞ்சிபுரம்.

மாவட்ட ஆட்சியர்,
காஞ்சிபுரம் மாவட்டம்,
காஞ்சிபுரம்.